**செ.வெ.எண் -35** **நாள்: 17.05.2022**

# பத்திரிக்கைச் செய்தி

சென்னை தாம்பரத்தில் உள்ள இந்திய விமானப்படை தேர்வு மையம் வாயிலாக இந்திய ஏர்மென் பணிக்கு விரைவில் தகுதி வாய்ந்த ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். மேற்காணும் பணிக்கு விருப்பமுள்ள கீழ்க்கண்ட தகுதிகளையுடைய ஆண்கள் மட்டும் தங்களது விவரங்களை கீழ்க்காணும் Google Form-இல் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSfKvsNW8mWFlk0jcOIVm-G4Md1NNQDSlMBCMXXdOXhu-G0jag/viewform?vc=0&c=0&w=1&flr=0

**விண்ணப்பிக்க தகுதிகள்** - 17 முதல் 21 வயதிற்குட்பட்ட **ஆண்கள்** மட்டும், பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு **இணையான** கல்வித்தகுதியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

எனவே அரியலூர் மாவட்டத்தினை சார்ந்த படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**